DINAMALAR (10/12/14)




■ புதுச்சேரியில் நேற்று துவங்கிய நூலக மாநாட்டில், வெளியிட்டார். அருகில், புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டி இயக்குனர் கவுல், அனுருபா நாயக், சங்கீதா கவுல்.

திட்டத்தின் மூலம் 18 வயது முதல் 62 வயது வரை உள்ளவர்கள் 8 அல்லது 9 ஆண்டுகள் மட்டுமே பிரிமியம் செலுத்தி, 12 ஆண்டுகள், 16 ஆண்டுகள், 21 ஆண்டுகளுக்கு இப்பாலிசியை தேர்வு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தில் 10 மடங்கு ஆண்டு பிரிமியம் அல்லது இறப்பின் போது வழங்கப்பட வேண்டிய காப்புத்தொகை அல்லது 125 சதவீதம் அடிப்படை காப்புத்தொகை ஆகியவற்றில் எது அதிகமோ அந்தத் தொகை இறப்பு நேரிட்டால், வழங்கப்படும்.

பாலிசி முதிர்வில் அடிப்படை காப்புத் தொகை மற்றும் போனஸ் வழங்கப்படும்' என்றனர்.

முன்னதாக, நேரடி வணிக கிளையின் மேலாளர் ரவிஷங்கர் வரவேற்றார்.

விழாவில், மூத்த குடிமக்களுக்கான வரிஷ்ட பென்ஷன் பீமா யோஜனா திட்டம் பற்றி விளக்கப்பட்டது.





■ நெல்லித்தோப்பு தொகு
தொடர்பாக, அமைச்சர் ராஜ

# சபரிமலை
# ரூ. 77.25
கடந்தாண்ன

சபரிமலை, டிச.10–
மண்டல பூஜைக்காக
சபரிமலை நடை திறந்த

# மொபைல்போனில் நூலகம் அப்துல் கலாம் வலியுறுத்தல்

புதுச்சேரி, டிச. 10–

'மொபைல் போன்களில், புத்தகங்கள் படிக்கும் வசதியை ஏற்படுத்த வேண்டும்' என, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசினார்.

புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் நிறுவனமும், டெல்நெட் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, 'அறிவு வளர்ச்சி, நூலகவியல் மற்றும் தகவல் கட்டமைப்பு' என்ற தலைப்பிலான, மூன்று நாள் மாநாடு, புதுச்சேரியில் உள்ள, ஓட்டல் ஆனந்தா இன்னில் நேற்று துவங்கியது.

மாநாட்டை துவக்கி வைத்து, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசியதாவது:

வரும் 2022ம் ஆண்டுக்குள், 50 கோடி பேரை திறன்மிக்கவர்களாக மாற்றுவதற்கு, மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைய, நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கும்.

நமது நாட்டில் 80 கோடி பேர், மொபைல் போன்களை பயன்படுத்துகின்றனர். எனவே, மொபைல் போன்களில், புத்தகம் படிக்கும் வசதியை ஏற்படுத்தினால் பயன் உள்ளதாக இருக்கும்.

'எம்–லைப்ரரி' எனப்படும், மொபைல்போன் நூலகத்தை அறிமுகம் செய்வது சாத்தியமானதுதான். இதனால், அதிகமானவர்களை, புத்தகம் படிக்க வைக்க முடியும்.

தற்போது, தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதால், மொழி பெயர்ப்பு வசதி மொபைல் போனில் ஏற்கனவே உள்ளது. எனவே, 'எம்–லைப்ரரி' மூலமாக, மற்ற மொழி புத்தகங்களையும், உடனுக்குடன் மொழிபெயர்த்து படிப்பதற்கு வாய்ப்பு உருவாகும். மேலும், சாப்ட்வேர் மூலமாக, புத்தகங்களில் உள்ளதை படிக்கச் செய்து, கேட்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தலாம்.

இது, பார்வையற்றவர்களுக்கு மட்டுமல்ல, ஒரு மொழியை படிக்கத் தெரியாமல், பேசுவதை புரிந்து கொள்பவர்களுக்கும் மிக உதவியாக இருக்கும்.

தினசரி ஒரு மணி நேரமாவது, நல்ல புத்தகங்களை படிப்பதை வழக்கமாக்கி கொள்ள வேண்டும். இதற்கு, ஒவ்வொரு வீட்டிலும் சிறிய நூலகத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்த நூலகத்தில், குழந்தைகளுக்கான புத்தகங்களும் இருக்க வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் புத்தகங்களை படிப்பதை பார்த்து, குழந்தைகளும் படிக்க ஆரம்பித்து விடுவர். அதுபோல படிக்க ஆரம்பித்தால், ஆசிரியர்களாக, விஞ்ஞானிகளாக, பொறியாளர்களாக வர வாய்ப்புள்ளது.

இவ்வாறு அப்துல் கலாம் பேசினார்.